SRI LANKA

**இலங்கை கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர்கள் கழகம்**

# மட்டம் III பரீட்சை – ஜனவரி 2025

## (Level III Examination – January 2025)

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

# (303) நிதிக் கட்டுப்பாடுகளும் கணக்காய்வும்

# (FCA)

**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியாளர்கள் கழகம்**
இல, 640, வென். முறுத்தெட்டுவென ஆனந்த நாகிமி மாவத்தை,
நாரேஹன்பிட்டி, கொழும்பு - 05
தொ.பே - 011 2 559 669

**கல்வி மற்றும் பயிற்சி பிரிவின் வெளியீடு**

# இலங்கை கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர்கள் கழகம்
# மட்டம் III பரீட்சை – ஜனவரி 2025
# (303) நிதிக் கட்டுப்பாடுகளும் கணக்காய்வும்
# பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(மொத்தம் 20 புள்ளிகள்)

**பகுதி - A**

***வினா 01 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :***

1. பணவீக்கம்

இலங்கையின் கட்டுமானத் துறையை பணவீக்கம் கணிசமாக பாதிக்கின்றது, பணவீக்கத்தினால் திட்டத்தினுடைய செலவுகள், முதலீடு, மற்றும் தொழிலாளர்களின் கிடைப்பனவுகள் பாதிப்படைவதனால் ஒட்டுமொத்த தொழில்துறையின் ஸ்திரத்தன்மை பாதிக்கப்படுகிறது. சேமிப்பு பாதிக்கப்படுவதால் வாடிக்கையாளர்களின் வாங்கக் கூடிய ஆற்றல் பாதிப்படைகின்றது.

2. நாணய பரிமாற்று விகிதங்கள்

நாணய பரிமாற்று விகிதம் இலங்கையின் கட்டுமானத் துறையை கணிசமாக பாதிக்கிறது. இறக்குமதி செய்யப்பட்ட மூல பொருட்கள், உபகரணங்கள் மற்றும் வெளிநாட்டு முதலீடுகளில் தங்கியிருக்கும் நாட்டில், அமெரிக்க டாலர் போன்ற முக்கிய நாணயங்களுக்கு எதிராக இலங்கை ரூபாயின் மதிப்பு குறைவது கட்டுமானத் துறையை எதிர்மறையாக பாதிக்கலாம்.

3. உலகளாவிய பொருளாதார காரணிகள்

வளங்கல் சங்கிலியில் ஏப்பட்ட தளம்பல்கள் மற்றும் அதிகரித்து வரும் வட்டி விகிதங்கள் போன்ற உலகளாவிய பொருளாதார காரணிகள், இலங்கையின் கட்டுமானத் துறையை எதிர்மறையாக பாதித்தன, இதன் விளைவாக நாட்டின் ஏற்றுமதி வருவாய் மற்றும் அத்தகைய வருமானத்தைச் சார்ந்திருப்பவர்களின் ஏற்றுமதி வருவாய் குறைந்து, அதன் மூலம் சேவனா ஹோம்ஸ் (Sewana Homes) போன்ற வணிகங்களை பாதிக்கிறது.

4. வட்டி விகிதங்கள்

வங்கிகளில் நிலவும் அதிக வட்டி விகிதங்களினால் வாடிக்கையாளர்கள் வீடுகள் போன்ற மூலதன சொத்துக்களை வாங்க அடமானக் கடனைப் பெற முடியவில்லை. மேலும், அதிக வட்டி விகிதங்கள் காரணமாக முதலீட்டாளர்கள் சொத்து போன்ற மூலதன சொத்துக்களில் முதலீடு செய்வதற்குப் பதிலாக வங்கிகளில் பணத்தை வைப்பு செய்வதன் மூலம் அதிக வருமானத்தைப் பெற விரும்புகிறார்கள்.

5. வரிவிதிப்பு

அதிக வரி விகிதங்கள் வாடிக்கையாளர்களின் வாங்கும் திறனை பாதித்துள்ளன, மேலும் சேமிப்பையும் பாதித்துள்ளன. எனவே, முதலீடுகள் / சொத்துக்கள் / வீடுகள் வாங்குவது இல்லை.

6. வேலையின்மை

வேலையின்மை அதிகரித்ததனால் மக்களின் வாங்கும் ஆற்றல் பாதிப்படைந்து சேவனா ஹோம்ஸ (Sewana Homes) போன்ற வணிகங்களை பாதித்தது

***(மொத்தம் 05 புள்ளிகள்)***

## *வினா 02 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

1. இணக்கப்பாடு இடர்

நிறுவனம் தரக் கட்டுப்பாட்டு (உற்பத்தி) தரநிலைகளுக்கு பின்பற்றத் தவறிவிட்டது. எனவே நிறுவனம் SLS சான்றிதழை இழக்க நேரிடும், மேலும் அபராதம் செலுத்த வேண்டியிருக்கும். உணவுப் பாதுகாப்பு விதிமுறைகளை பின்பற்றாமைக்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் வழக்குகள் தொடரப்படலாம்.

2. நற்பெயர் ஆபத்து

குறைந்த தரம் வாய்ந்த பொருட்களை வழங்குவது வாடிக்கையாளர்களையும் சந்தைப் பங்கையும் இழக்க வழிவகுக்கிறது. மேலும், கோகோ (Coco) எண்ணெய் உயர் தரம் வாய்ந்தது என்று நிறுவனம் கூறுகிறது. மோசமான தரமான பொருட்கள் பற்றிய செய்திகள் ஊடகங்களில் வெளிவந்தால், பொருட்களின் தரத்தில் மிகவும் கவனம் செலுத்தும் அதிக விலைக்கு கொள்வனவு செய்கின்ற சுகாதார உணர்வுள்ள வாடிக்கையாளர்கள் மத்தியில் உயர்தரமான தேங்காய் எண்ணெய் என்ற நற்பெயரை நிறுவனம் இழக்கும்.

3. செயல்பாட்டு ஆபத்து

போதுமான சோதனைகள் இல்லாததால் உற்பத்தியில் பயன்படுத்தப்படும் நச்சுப் பொருட்கள் செயல்பாட்டில் ஆபத்தை ஏற்படுத்துகின்றன.

***(மொத்தம் 05 புள்ளிகள்)***

## *வினா 03 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

| **கணக்காய்வு நடைமுறை** | **விளக்கம்** | **உதாரணம்** |
|---|---|---|
| பரிசோதனை | பரிசோதனை என்பது பதிவுகள் அல்லது ஆவணங்களை சோதனை செய்தல், ஆவணங்கள் உள்ளக அல்லது வெளியக ஆவணங்களாகவோ இருக்கலாம், அவை காகித வடிவிலோ, இலத்திரனியல் வடிவத்திலோ அல்லது வேறு வடிவமாகவோ இருக்கலாம். அல்லது ஒரு சொத்தின் பௌதிக ரிதியான சோதனையாக இருக்கலாம். | • வங்கி அறிக்கைகளை ஆய்வு செய்தல்<br>• கடன் ஒப்பந்தங்களை ஆய்வு செய்தல்<br>• விற்பனை பட்டியல்களை ஆய்வு செய்தல்<br>• ஒரு நிலத்தின் உரிமைப் பத்திரத்தை ஆய்வு செய்தல் |
| கண்காணிப்பு | கண்காணிப்பு என்பது மற்றவர்களால் செய்யப்படும் ஒரு செயல்முறை அல்லது நடைமுறையை அவதானிப்பதை உள்ளடக்குகிறது. | • பௌதிக ரிதியான இருப்பெடுத்தலை அவதானித்தல் • ஒரு நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறைகளை அவதானித்தல் |
| வெளியக | ஒரு வெளியக உறுதிப்படுத்தல் | ○ கடன் பட்டோர் ∴கடன் |

| | | |
|---|---|---|
| உறுதிப்படுத்தல்கள் | என்பது கணக்காய்வாளரால் மூன்றாம் தரப்பினரிடமிருந்து (உறுதிப்படுத்தும் தரப்பினரிடமிருந்து), காகித வடிவில் அல்லது இலத்திரனியல் அல்லது பிற வடிவில் கணக்காய்வாளருக்கு நேரடியாக கிடைக்கப் பெற்ற எழுத்துப்பூர்வ கணக்காய்வுச் சான்றாகும். | கொடுத்தோரின் உறுதிப்படுத்தல்கள்<br>○ நடைமுறைக் கணக்கு மீதி, முதலீடுகள் மற்றும் கடன்களுக்கான வங்கியின் உறுதிப்படுத்தல்.<br>○ சரக்கிருப்பை பேணும் தரப்பினரிடமிருந்தான உறுதிப்படுத்தல்.<br>○ சட்ட ஆலோசகர்களிடமிருந்தான உறுதிப்படுத்தல். |
| மீள் கணிப்பீடு | மீள் கணிப்பீடு என்பது ஆவணங்களினையும் பதிவுகளையும் எண் கணித ரீதியாக சரிபார்க்கும் செயன்முறை ஆகும். மீள் கணிப்பீடு மனித வலு மூலமாகவோ இலத்திரனியல் மூலமாகவோ மேற்கொள்ளப்படலாம் | பெறுமானத்தேய்வு கணிப்பீடு<br>கடன் வட்டி கணிப்பீடு |
| மீள் செய்கை | மீள் செய்கை என்பது நிறுவனத்தின் உள் கட்டுப்பாட்டின் ஒரு பகுதியாக முதலில் செயல்படுத்தப்பட்ட நடைமுறைகள் அல்லது கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் சுயாதீனமாக மேற்கொள்வதை குறிக்கும் . | • வங்கி கணக்கிணக்க கூற்றை மீள தயாரித்தல்<br>• வழங்குநர் அறிக்கைக்கும் தனிப்பட்ட வழங்குநர் மீதிகளுக்குமான இணக்க கூற்றை மீள தயாரித்தல்<br>• கடன் பட்டோர் துணை பேரேட்டிற்கும் கடன் பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கிற்குமான இணக்க கூற்றை மீள தயாரித்தல் |
| விசாரணை | விசாரணை என்பது நிறுவனத்திற்குள் அல்லது நிறுவனத்திற்கு வெளியே, நிதி மற்றும் நிதி சாராத அறிவுள்ள நபர்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்வதை குறிக்கும் . | • களஞ்சிய முகாமையாளரிடம் விசாரணை<br>• உள்ளக கணக்காய்வாளரிடம் விசாரணை |
| பகுப்பாய்வு செயன்முறைகள் | பகுப்பாய்வு செயன்முறைகள் என்பது நிதி மற்றும் நிதி சாராத தரவுகளுக்கு இடையேயான நம்பத்தகுந்த / இருக்கக்கூடிய தொடர்புகளை பகுப்பாய்வு செய்வதன் மூலம் நிதித் தகவலை மதிப்பீடு செய்தல் | • முந்தைய காலகட்டங்களுக்கான ஒப்பிடக்கூடிய தகவல்<br>• எதிர்பார்க்கப்பட்ட முடிவுகள் அதாவது வரவு செலவுத் திட்டம் மற்றும் எதிர்வு கூறல் போன்றன<br>• ஒரே மாதிரியான தொழில்துறை தகவல்களின் ஒப்பீடு |

*(மொத்தம் 05 புள்ளிகள்)*

SRI LANKA

## *வினா 04 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

**(a)**

1. நிறுவனத்திற்குள் தரத்திற்கான தலைமைத்துவப் பொறுப்புகள்
2. பொருத்தமான ஒழுக்க நெறிக் கோட்பாடு
3. வாடிக்கையாளரை ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் தொடர்ச்சியான உறவை பேணுதல்
4. மனித வளங்கள்
5. ஈடுபாட்டு செயல்திறன்
6. கண்காணிப்பு

*(02 புள்ளிகள்)*

**(b)**

1. தொழில்முறை நியமங்கள் மற்றும் பொருந்தக்கூடிய சட்ட மற்றும் ஒழுங்குமுறை கோட்ப்பாடுகளுக்கு அமைவாக பணியைச் செய்தல்.
2. நிறுவனத்தின் தரக் கட்டுப்பாட்டுக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுக்கு அமைவாக செயல்முறைகளை பின்பற்றுதல் .
3. ஈடுபாட்டுக் குழுக்கள் தங்கள் பணியின் நோக்கங்களைப் புரிந்துகொள்வதற்காக ஈடுபாடு குறித்து எவ்வாறு விளக்கம் அளிக்கப்படுகின்றன.
4. ஈடுபாட்டு மேற்பார்வை மற்றும் ஊழியர் பயிற்சி போன்றவற்றுக்கான செயல்முறைகள்.
5. மேற்கொண்ட பணியை மதிப்பாய்வு செய்யும் முறைகள், எடுக்கப்பட்ட முக்கியமான தீர்மானங்கள் மற்றும் அறிக்கையிடல் முறைமை .
6. மேற்கொள்ளப்பட்ட பணி பற்றிய பொருத்தமான ஆவணமாக்கல் மற்றும் மதிப்பாய்வின் நேரம் மற்றும் அளவு .
7. தற்போதைய கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை கடைப்பிடிப்பதற்கான செயல்முறைகள்.

*(03 புள்ளிகள்)*

*(மொத்தம் 05 புள்ளிகள்)*

*பகுதி A முடிவு*

## வினா 05 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :

**(a)**

1. தேறிய நடைமுறை பொறுப்பு நிலைமை : நிறுவனத்தின் மொத்த நடைமுறை பொறுப்புகள் நிறுவனத்தின் நடைமுறை சொத்துக்களை விட அதிகமாக இருக்கும் நிலைமை. அவ்வாறான சூழ்நிலையில், வழங்குனர்கள் நிறுவனத்தின் விவகாரங்களைத் தொடர விரும்பாமல் இருக்கலாம் அத்துடன் அவர்களின் கடன்கள் நிலுவையில் இருக்கலாம் .
2. தொடர்ச்சியான நட்டம் : நிறுவனம் முந்தைய ஆண்டுகளிலும் நடப்பு ஆண்டிலும் நட்டத்தை உழைத்துள்ளது. இது வணிக நடவடிக்கைகளில் சிரமங்கள் இருப்பதைக் குறிக்கலாம் அத்துடன் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றல் குறித்த சந்தேகம் இருக்கலாம்.
3. திரட்டப்பட்ட நட்டங்கள் மற்றும் தீவிரமான மூலதன இழப்பிற்கான சாத்தியம் : 2007 ஆம் ஆண்டின் 7ம் இலக்க கம்பெனிச் சட்டத்தின்படி, தேறிய பொறுப்பு நிலை என்பது தீவிர மூலதன இழப்பு நிலைமையின் வரம்பாகும். நிறுவனம் அதன் முதலீடுகளில் போதுமான வருமானத்தை ஈட்டவில்லை.
4. செயற்பாட்டு காசுப் பாய்ச்சலின் எதிர்மறை நிலைமை : நிலையான நிர்வாகச் செலவு மற்றும் குறைந்த வருமானம் மூலமாக நிறுவனத்தின் செயற்பாட்டு காசுப் பாய்ச்சல் எதிர்மறையாக உள்ளது , இது நிறுவனத்தின் தொடர்ந்து இயங்கும் ஆற்றல் குறித்த சந்தேகத்தை உருவாக்குகிறது.
5. கட்டுமானத் துறையில் சரிவு : நிறுவனம் செயல்படாத அல்லது வளர்ச்சியடையாத ஒரு துறையில் உள்ளது. எனவே, நிறுவனத்தை நடத்துவதற்கு தேவையான நிதியை திரட்டுவதில் சந்தேகம் உள்ளது.
6. உறவுமுறைத் தரப்பினரிடமிருந்து பெறவேண்டியவை : நிறுவனம் கணிசமான அளவு நடைமுறை பொறுப்புகளைக் கொண்டிருந்தாலும், அதன் நடைமுறை சொத்துக்களில் உறவுமுறைத் தரப்பினரிடமிருந்து பெற வேண்டிய டுமுசு 10 மில்லியன் உள்ளது

***(04 புள்ளிகள்)***

(b)

1. கடனுக்கான கடன் ஒப்பந்தத்தைச் சரிபார்க்கவும்
2. ஆண்டுக்கான வட்டியை சுயாதீனமாகக் கணக்கிடவும்
3. கடனுக்காக செலுத்தப்பட்ட அடுத்தடுத்த கொடுப்பனவுகளைச் சரிபார்க்கவும்
4. BCC இலிருந்து மீதி உறுதிப்படுத்தலைப் பெறவும்.
5. தெரிந்த தொடர்புடைய தரப்பினரின் பெயர்களுக்காக முந்தைய ஆண்டு பணி ஆவணங்களை மதிப்பாய்வு செய்யவும்
6. பங்குதாரர்கள் மற்றும் இயக்குநர்களின் கூட்டங்களின் அறிக்கைகளை மதிப்பாய்வு செய்யவும்
7. இயக்குநர்களின் நலன்களின் பதிவேடு போன்ற பிற தொடர்புடைய சட்டப்பூர்வ பதிவுகளை மதிப்பாய்வு செய்யவும்.
8. குறிப்பாக நிதிக் காலத்தின் முடிவில் அல்லது அதற்கு அருகில் அங்கீகரிக்கப்பட்ட பரிவர்த்தனைகளில், பெரிய அல்லது அசாதாரண பரிவர்த்தனைகள் அல்லது மீதிகளுக்கான கணக்கியல் பதிவுகளை மதிப்பாய்வு செய்யவும்.
9. இயக்குநர்கள் மற்றும் அதிகாரிகள் பிற நிறுவனங்களுடன் தொடர்புகள் குறித்து

விசாரிக்கவும்.

10. முதன்மை பங்குதாரர்களின் பெயர்களைத் தீர்மானிக்க பங்குப் பதிவேட்டை மதிப்பாய்வு செய்யவும்.

11. உறவுமுறைத் தரப்பினர் அல்லது உறவுமுறைத் தரப்பினரின் பரிவர்த்தனைகள் இருப்பதற்கான அறிகுறிகளுக்கு, வழக்கறிஞர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற பட்டியல்கள் மற்றும் கடிதப் பரிமாற்றங்களை மதிப்பாய்வு செய்யவும்.

***(03 புள்ளிகள்)***

**(c)**

1. உறவுமுறைத் தரப்பினரின் பரிவர்த்தனைகள் கட்டணம் இல்லாமல் இடம்பெற்றுள்ளன.
2. உறவுமுறைத் தரப்பினரின் பரிவர்த்தனைகள் கணக்காய்வாளர்களுக்குத் தெளிவாகத் தெரியவில்லை.
3. ஒரு தரப்பினருடனான உள்ள பரிவர்த்தனைகள், அவை உறவுமுறைத் தரப்பினரின் பரிவர்த்தனைகள் என்று கணக்காய்வாளர்களுக்கு தெரியும் என்று எதிர்பார்க்க முடியாது.
4. உறவுமுறைத் தரப்பினரின் ஒரு பரிவர்த்தனையின் முழு விதிமுறைகளையும் மறைக்க அல்லது ஒரு பரிவர்த்தனையின் சாராம்சம் என்ன என்பதை மறைக்க நிர்வாகத்தால் தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
5. நிறுவன அமைப்பு சிக்கலானது.

***(03 புள்ளிகள்)***

***(மொத்தம் 10 புள்ளிகள்)***

## *வினா 06 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

(a)

1. சுயஅக்கறை அச்சுறுத்தல்: சட்ட நியதிக் கணக்காய்வுக் குழுவில் உறுப்பினராக இருப்பவருக்கு வாடிக்கையாளரில் நேரடியான நிதி அக்கறை உள்ளது. பரிசை ஏற்றுக்கொள்வது சுயஅக்கறை அச்சுறுத்தலை உருவாக்கும், ஏனெனில் இந்தப் பரிசு சச்சினுக்கு பெறுமதி வாய்ந்த்ததாக இருக்கும் .

2. சுயமீளாய்வு அச்சுறுத்தல்: நிதிநிலை அறிக்கைகளில் பதிவுசெய்யப்பட்ட வருமான வரி மற்றும் பிற்போடப்பட்ட வரி ஒதுக்கீட்டைக் கணக்கிட சச்சின் உதவினார், பின்னர் அது அவரால் மதிப்பாய்வு செய்யப்பட்டது, அத்துடன் திசேரா கணக்காய்வுக் கருத்தை அறிக்கையிட்டு கையொப்பமிடுவதற்கு அந்த மதிப்பாய்வில் தங்கியிருப்பார். வரி கணக்கீடுகள் மதிப்பீட்டு ரீதியானவை, வரி அதிகாரிகளால் மதிப்பாய்வு செய்யப்படுகின்றன, எனவே, பொருண்மை ரீதியானவை. இது சுயமீளாய்வு அச்சுறுத்தலை உருவாக்குகிறது.

3. பரிச்சய தன்மை அச்சுறுத்தல்: வாடிக்கையாளருடன் நீண்ட கால அல்லது நெருக்கமான உறவு இருப்பதாகத் தெரிகிறது. எனவே, பரிச்சய தன்மை அச்சுறுத்தல் உருவாகுகிறது.

***(06 புள்ளிகள்)***

**(b)**

1. சிரேஸ்ட உத்தரவாத பணியாளர்களை சுழற்சி முறையில் அமைத்தல்.
2. உத்தரவாதம் அல்லாத சேவைகளில் ஈடுபடாத தொழில்முறை கணக்காளர்களைக் கொண்டிருத்தல்.
3. உத்தரவாதம் அல்லாத சேவைகளை வழங்குவதற்காக தனித்தனி அறிக்கையிடல் எல்லைகளுடன் வெவ்வேறு பங்காளர்கள் மற்றும் ஈடுபாட்டு குழுக்களைப் பயன்படுத்துதல்.
4. வாடிக்கையாளரின் நிர்வாகத்திற்கு பொறுப்பானவர்களுக்கு வழங்கப்படும் சேவைகளின் தன்மையையும் மேலதிகமாக வசூலிக்கப்படும் கட்டணங்களின் விபரங்களையும்

வெளிப்படுத்துதல் .

5. சச்சினுக்கு பரிசை ஏற்க வேண்டாம் என்று அறிவுறுத்துங்கள். சச்சின் பரிசை ஏற்றுக்கொண்டால் ஏற்படக்கூடிய விளைவுகளை விளக்குவதோடு , மீறினால் அது குறித்து தொடர்புடைய தொழில்முறை அமைப்புக்கு தெரிவிக்கவும்.

6. வரி கணிப்பீடுகளை பரிசீலனை செய்வதில் சச்சின் ஈடுபடக்கூடாது. வரி கணக்கீட்டில் தேர்ச்சி பெற்ற மற்றொரு நபர் வரி கணிப்பீடு மற்றும் தொடர்புடைய வேலைகளின் ஆவணங்களை மதிப்பாய்வு செய்ய வேண்டும். இந்த பிரச்சினை நிர்வாகத்தின் வுஊறுபு இற்கு தெரியப்படுத்தப்பட வேண்டும் .

7. சேவைகளை மேம்படுத்துதல்: எந்தவொரு மேம்படுத்துதல் நடவடிக்கைகளுக்கும் முன், பதவி உயர்வுகள் குறித்த நிறுவனத்தின் கொள்கை மற்றும் அனுமதிக்கப்பட்ட பதவி உயர்வுகளின் தன்மை, மற்றும் ஒப்புதல் செயல்முறை குறித்து ஊழியர்களுக்கு தெளிவு படுத்துதல் .

8. அடிப்படைக் கொள்கை மற்றும் கோட்ப்பாடுகளுக்கு இணங்குவதன் முக்கியத்துவத்தை நிறுவனத்தின் தலைமை வலியுறுத்த வேண்டும் .

9. ஒரு உத்தரவாதக் குழுவின் உறுப்பினர்கள் பொது நலனுக்காக செயல்படுவார்கள் என்ற எதிர்பார்ப்பை நிறுவனத்தின் தலைமை உருவாக்க வேண்டும்.

10. ஈடுபடுத்தலின் தரக் கட்டுப்பாட்டை செயல்படுத்துவதற்கும் கண்காணிப்பதற்கும் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் அமுல் படுத்தப்பட வேண்டும் .

11. அடிப்படைக் கொள்கைகளுக்கு இணங்குவதற்கான அச்சுறுத்தல்களை அடையாளம் காணுதல் , அந்த அச்சுறுத்தல்களின் முக்கியத்துவத்தை மதிப்பிடுதல் மற்றும் அச்சுறுத்தல்களை நீக்க அல்லது குறைக்க பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பயன்படுத்துதல் ஆகியன தொடர்பான கொள்கைகள் ஆவணப்படுத்தப்பட வேண்டும்.

12. அடிப்படைக் கொள்கைகளுக்கு இணங்க வேண்டிய ஆவணப்படுத்தப்பட்ட நிறுவன கொள்கைகள் மற்றும் நடைமுறைகள்.

13. நிறுவனம் அல்லது ஈடுபடுத்தல் குழுக்களின் உறுப்பினர்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு இடையேயான அக்கறை அல்லது உறவுகளை அடையாளம் காண உதவும் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள்.

14. ஒரு வாடிக்கையாளரிடமிருந்து பெறப்பட்ட வருவாயைச் சார்ந்திருப்பதைக் கண்காணித்து, தேவைப்பட்டால், அதனை முகாமை செய்வதற்கான கொள்கைகள் மற்றும் நடைமுறைகள்.

15. ஈடுபடுத்தலின் முடிவை, ஈடுபடுத்தல் குழுவில் உறுப்பினர்களாக இல்லாத நபர்கள் பொருத்தமற்ற முறையில் தாக்கம் செலுத்துவதைத் தடுக்கும் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள்.

16. ஒரு நிறுவனத்தின் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் , அவற்றில் ஏற்படும் மாற்றங்கள் உட்பட, அனைத்து பங்காளர்களுக்கும் தொழில்முறை ஊழியர்களுக்கும் சரியான நேரத்தில் தெரிவித்தல், அத்தகைய கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் குறித்து பொருத்தமான பயிற்சி மற்றும் அறிவை வழங்குதல் .

17. நிறுவனத்தின் தரக் கட்டுப்பாட்டு முறைமையின் செயல்பாட்டை மேற்பார்வையிடுவதற்கு மூத்த நிர்வாக உறுப்பினரை பொறுப்பாக நியமித்தல் .

18. உத்தரவாத வாடிக்கையாளர்கள் மற்றும் உறவுமுறை நிறுவனங்களின் பங்காளர்கள் மற்றும் தொழில்முறை ஊழியர்களுக்கு சுயாதினமாக செயற்பட ஆலோசனை வழங்குதல், .

19. கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுடன் இணங்குவதை ஊக்குவிப்பதற்கான ஒரு ஒழுக்க முறை வழிகாட்டல்.

20. ஊழியர்களுக்கு அடிப்படைக் கொள்கைகளுடன் இணங்குவது தொடர்பான எந்தவொரு பிரச்சினையையும் நிறுவனத்திற்குள் உயர் மட்டங்களுக்குத் தொடர்புகொள்வதை ஊக்குவிப்பதற்கு வெளியிடப்பட்ட கொள்கைகள் மற்றும் நடைமுறைகள்.

*(04 புள்ளிகள்)*

*(மொத்தம் 10 புள்ளிகள்)*

## *வினா 07 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

(a)

1. **சரக்கு இருப்பு மதிப்பீட்டில் குறிப்பிடத்தக்க தவறான அறிக்கையிடல்**

• LAKS 2 இன் படி - சரக்குகள், கிரயம் அல்லது நிகர தேறக்கூடிய மதிப்பு (NRV) ஆகியவற்றில் குறைவான பெறுமதியில் அளவிட வேண்டும். நிறுவனத்தின் வரைவு நிதிக்கூற்றில் ல் சரக்குகள் கிரயத்தில் (ரூ. 74,125,300) உள்ளன, அதே நேரத்தில் நிகர தேறக்கூடிய மதிப்பு ரூ. 41,260,415 - என மதிப்பிடப்பட்டுள்ளது.

• இதன் விளைவாக சரக்கிருப்பின் அளவு ரூ. 32,864,885 (ரூ. 74,125,300 - ரூ. 41,260,415) அதிகமாகக் கணக்கிடப்பட்டுள்ளது .

• சீராக்கம் செய்யப்படாவிட்டால், விற்கப்பட்ட பொருட்களின் கிரயம் (ஊழுபுளு) குறைவாகக் குறிப்பிடப்பட்டிருப்பதால், அதே அளவு இலாபம் அதிகமாக காட்டப்படுவதற்கு இது வழிவகுக்கிறது.

2. **பொருண்மை மட்ட பரிசீலனைகள்**

• கணக்காய்வுக்கான பொருண்மை மட்டம் வரிக்கு முந்தைய இலாபத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது, இது ரூ. 1.2 மில்லியன்.

• ரூ. 32,864,885 என்பது பொருண்மை மட்டத்தை விட கணிசமாக அதிகமாகும், இது பொருண்மைசார் தவறான கூற்றாகும்.

• அறிக்கையிடப்பட்ட இலாபம் ரூ. 8,560,210 மட்டுமே என்பதால், சரக்கு மதிப்பை சீராக்கம் செய்வதன் மூலம் குறிப்பிடத்தக்க நட்டம் ஏற்படும், இது நிதி அறிக்கைகளை நேரடியாக பாதிக்கிறது.

**3. நிதி அறிக்கைகளை சீராக்கம் செய்ய நிர்வாகம் மறுத்தல்**

• அறிக்கையிடப்பட்ட செயல்திறன் மற்றும் எதிர்கால வங்கி வசதிகளை பாதிக்கும் என்பதனால் நிதி அறிக்கைகளை சீராக்கம் செய்ய முகாமைப் பணிப்பாளர் மறுக்கிறார்.

• இது முகாமையின் பக்க சார்பு மற்றும் வேண்டுமென்றே தவறான அறிக்கையிடல் (மோசடி ஆபத்து) போன்ற சாத்தியமான இடரை க் குறிக்கிறது.

• நிர்வாகம் தொடர்ந்து சீராக்கம் செய்தலை மறுத்தால், நிதி கூற்றுகள் உண்மையான மற்றும் செம்மையான பார்வையை வழங்காது, இது மாற்றியமைக்கப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்துக்கு வழிவகுக்கும்.

**4. கணக்காய்வு அபிப்பிராயத்தின் மீதான தாக்கம்**

தவறான அறிக்கையிடலின் தன்மை மற்றும் நிதி அறிக்கைகளில் அதன் பரவலான தாக்கத்தைக் கருத்தில் கொண்டு, கணக்காய்வாளர் பொருத்தமான கணக்காய்வு அபிப்பிராயத்தைக் கருத்தில் கொள்ள வேண்டும்:

**முடிவுரை**

SLAuS 705 இன் படி, சரக்கு மிகைப்படுத்தலுக்கான நிதி கூற்றுக்களை சீராக்கம் செய்ய நிர்வாகம் மறுப்பதால், நிதி அறிக்கைகள் பொருண்மை மற்றும் பரவலான தவறான அறிக்கையிடல் காரணமாக உண்மையான மற்றும் செம்மையான பார்வையை அளிக்கவில்லை என்று கணக்காய்வாளர் பாதகமான அபிப்பிராயத்தை வெளியிட வேண்டும்.

***(06 புள்ளிகள்)***

**(b)**

1) தலைப்பு
2) முகவரியாளர்
3) கணக்காய்வாளரின் கருத்து
4) கருத்துக்கான அடிப்படை
5) தொடர்ந்தியங்கு நிலைமை
6) முக்கிய கணக்காய்வு விடயங்கள்
7) ஏனைய தகவல்கள்
8) நிதி அறிக்கைகளுக்கான பொறுப்புகள்
9) நிதி அறிக்கைகளின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புகள்
10) ஏனைய அறிக்கையிடல் பொறுப்புகள்
11) ஈடுபாட்டு பங்காளரின் இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தின் உறுப்பினர் இலக்கம்
12) கணக்காய்வாளரின் கையொப்பம்
13) கணக்காய்வாளரின் முகவரி
14) கணக்காய்வு அறிக்கையின் திகதி

**(04 புள்ளிகள்)**

**(மொத்தம் 10 புள்ளிகள்)**

*பகுதி **B** முடிவு*

SRI LANKA

## வினா 08 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(a)

1. இருப்பு முமைத்துவ செயல்முறை
2. கொள்வனவு செயல்முறை
3. சம்பள செயல்முறை
4. சொத்து பொறி மற்றும் உபகரணங்கள் செயல்முறை
5. பண முமைத்துவ செயல்முறை
6. வருவாய் செயல்முறை

*(04 புள்ளிகள்)*

**(b)**

**(i)**

| | கட்டுப்பாட்டு பலவீனங்கள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 01. | உற்பத்தி மாதிரிகள் தகைமை பெற்ற தர உறுதிப்பாட்டு பரிசோதகரால் பரிசோதிக்கப்படவில்லை. | அனைத்து உற்பத்தி மாதிரிகளும் தகைமை பெற்ற தர உறுதிப்பாட்டு பரிசோதகரால் பரிசோதிக்கப்படுவதை உறுதி செய்வதன் மூலம் முறையான தர உறுதிப்பாட்டு செயன்முறையை அமுல்படுத்தவும். ஊழியர்களுக்கு கிரமமான பயிற்சி செயலமர்வுகளை நடத்தி, உற்பத்தி தரத்தை பேணுவதற்கு தெளிவான தரக் கட்டுப்பாட்டு நடைமுறைகளை ஸ்தாபிக்கவும். |
| 02 | சரக்கு இருப்பு முகாமைத்துவ முறைமையில் இருப்பு அளவுகள் மட்டும் பதிவு செய்யப்படுகிறது . | மேலதிக விபரங்களான பொருள் விபரம் , தொகுதி எண், காலாவதி திகதி மற்றும் வழங்குநர் விபரம் போன்றவற்றைச் இணைப்பதன் மூலம் சரக்கு இருப்பு முகாமைத்துவ முறைமையை மேம்படுத்தவும். தரவின் துல்லியம் மற்றும் முழுமையை உறுதிப்படுத்த அவ்வப்போது கணக்காய்வை நடைமுறைப்படுத்தவும். |
| 03 | அதிக அளவு காலாவதியான தேங்காய்த் தூள் சரக்கிருப்பில் உள்ளடங்கி உள்ளது<br>. | காலாவதி திகதி நெருங்கும் போது தன்னியக்கமாக எச்சரிக்கை வழங்க கூடிய ஒரு வலுவான சரக்கு இருப்பு கட்டுப்பாட்டு முறைமையை ஸ்தாபிக்கவும்.<br>சரக்கு வழக்கற்றுப் போவதைக் குறைக்க முதல் உள் முதல் வெளி (குஜகுமு) சரக்கு இருப்பு முகாமை முறைமையை அமுல்படுத்தவும்.<br>வழக்கமான சரக்கு இருப்பு பரிசோதனைகளை நடத்தி, காலாவதியான பொருட்களை உடனடியாக அப்புறப்படுத்தி அல்லது திருப்பி அனுப்பவுதன் மூலம் கலப்படம் மற்றும் தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுக்க முடியும். |
| 04 | வழங்குனர்களுக்கு பணம் செலுத்தும்போது, சில கொள்வனவுக் கட்டளைகள் தொடர்புடைய விலைப்பட்டியல்களுடன் | மூன்று வழி பொருத்தல் முறையை (கொள்வனவுக் கட்டளை, விலைப்பட்டியல் மற்றும் பொருட்கள் பெறுவனவு ) அமுல்படுத்துவதன் மூலம் கொள்முதல் மற்றும் கட்டணம் செலுத்தல் முறைமையை வலுப்படுத்தவும்.<br>அனைத்து கொடுப்பனவுகளுக்கும் முறையான மதிப்பாய்வு மற்றும் ஒப்புதலை உறுதிசெய்வதோடு , முரண்பாடுகளைத் |

| | | |
|---|---|---|
| | பொருந்தவில்லை. | தடுக்க வழக்கமான இணக்க நடைமுறைகளை மேற்கொள்ளுங்கள். |
| 05 | சரக்கு இருப்பு மதிப்பீடுகள் கைமுறையாக பராமரிக்கப்படுகின்றன | சரக்கு இருப்பு மதிப்பீடுகளை தானியக்க மயப்படுத்தலாம்.<br>பொருத்தமான தானியக்க சரக்கு இருப்பு மதிப்பீட்டு முறைமையை அமுல்படுத்துவதில் கவனம் செலுத்தவும், அதன்மூலம் கணக்கியலின் நாட் குறிப்புக்களும் தானியக்க சரக்கு இருப்பு மதிப்பீட்டு முறைமையின் பதிவுகளும் ஒன்றுடன் ஒன்று பொருந்துவதை உறுதிப்படுத்தலாம் . . |
| 06 | வழங்குனர்களுக்கு பணம் செலுத்தும்போது, சில கொள்வனவுக் கட்டளைகள் தொடர்புடைய விலைப்பட்டியல்களுடன் உடன்படவில்லை | ஒவ்வொரு பரிவர்த்தனைகளுடனும் தொடர்புடைய மூல ஆவணங்களை சரிபார்த்த பிறகு அனைத்து கொடுப்பனவுகளும் செலுத்தப்பட வேண்டும். |
| 07 | பதிவுகளைப் பேணுவதற்கான ஒரேயொரு பயனர் கணக்கைப் பயன்படுத்தி நிதிப் பிரிவில் உள்ள அனைத்து ஊழியர்களும் சகல முறைமைகளையும் தரவுத்தளங்களையும் அணுக முடியும். மட்டுப்படுத்தப்பட்ட செயல்முறை மற்றும் ஐவு கட்டுப்பாடுகளின் போதாமை. | • உள்ளீட்டின் துல்லிய தன்மையை உறுதிப்படுத்துவதற்காக பலமான கட்டுப்பாடுகளை ஸ்தாபித்தல்.<br>• அங்கீகரிக்கப்பட்ட தனிநபர்களுக்கான அணுகலை மட்டுப்படுத்தல் .<br>• தகவல் கோப்பில் அங்கீகரிக்கப்படாத மாற்றங்களைத் தடுத்தல்<br>• தகவல் முறைமையில் அங்கீகரிக்கப்படாத மாற்றங்களைக் கண்டறிதல் மற்றும் தடுத்தல்<br>• கடவுச்சொல் பாதுகாப்பு<br>• கடவுச்சொற்கள், மட்டுப்படுத்தப்பட்ட அணுகல் போன்ற பயனர் அடையாளக் கட்டுப்பாடுகள். |
| 08 | பதிவு செய்யப்படாத வழங்குனர்களிடமிருந்து கொள்வனவு | • நிறுவனம் பதிவுசெய்யப்பட்ட வழங்குனர்களைப் பேணுதல் வேண்டும் அத்துடன் பதிவுசெய்யப்பட்ட வழங்குனர்களிடம் இருந்து மட்டும் கொள்வனவு செய்யப்பட வேண்டும். |

***(04 புள்ளிகள்)***

**(C)**

| | கட்டுப்பாட்டு நடவடிக்கை | விளக்கம் |
|---|---|---|
| 1. | கணிப்பீடு மற்றும் கணக்கீட்டு கட்டுப்பாடு (Arithmetical and Accounting Controls) . | பரிவர்த்தனைகளை சரியாகவும் துல்லியமாகவும் பதிவு செய்து செயலாக்கம் செய்யப்பட்டுள்ளதா என சரிபார்க்கும் செயல்பாடு<br>**உதாரணம்** : கணக்கு முறைமையில் உள்ளவாறான மீதியையும் பொது பேரேட்டில் உள்ளவாறான மீதியையும் இணக்கம் செய்தல் |

| | | |
|---|---|---|
| 2. | பௌதீக ரீதியான கட்டுப்பாடு (Physical Controls) | அங்கீகரிக்கப்படாத அணுகலைத் தடுக்கும் நடவடிக்கைகள<br>**உதாரணம்** : களஞ்சிய சாலைக்குள் நுழைவதற்கு பயோமெட்ரிக் கட்டுப்பாடுகளைப் பயன்படுத்துதல். |
| 3. | அங்கீகாரம் மற்றும் ஒப்புதல் (Authorization and Approval) | செயல்களை செயல்படுத்துவதற்கு முன்பு அவற்றுக்கு ஒப்புதல் பெறுதல்.<br>**உதாரணம்** : ஒரு கொடுப்பனவை செய்யும் போது அது உயர் மட்ட முகாமையால் அங்கீகரிக்கப்படல் வேண்டும் |
| | வேலைகளை பகிர்ந்தளித்தல் (Segregation of Duties) | தவறுகள் அல்லது மோசடிகள் மூலம் ஏற்படும் இடரை குறைக்கஇ பரிவர்த்தனைகளை பதிவு செய்வதல் , அங்கீகரித்தல் சொத்துக்களை பாதுகாத்தல் போன்ற பணிகள்<br>வேறு வேறு ஊழியர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுகின்றன. |
| 4. | முகாமை கட்டுப்பாடு (Management Controls) | முகாமையின் செயற்பாடுகளை மதிப்பாய்வு செய்தல்.<br>**உதாரணம்** : வரவு செலவுத் திட்டத்தை உண்மையான பெறுபேற்றுடன் ஒப்பீடு |
| 5. | மேற்பார்வை கட்டுப்பாடு (Supervision Controls)<br>. | ஊழியர்களின் செயற்பாடுகளை கண்காணித்தல் அல்லது மேற்பார்வை செய்தல் |
| 6. | நிறுவன கட்டுப்பாடு (Organizational Controls) | அறிக்கையிடல் வரிசை , அதிகார வரிசை போன்றவற்றுக்கான கட்டுப்பாடுகள் நிறுவன அமைப்பு மூலம் வழங்கப்படுகின்றன. இதன் மூலம் ஒவ்வொரு நிலைமையிலும் முகாமையாளர்கள் பொறுப்புகளையும் அதிகாரங்களையும் பெறுகின்றனர். |
| 8. | பணியாளர் கட்டுப்பாடு (Personnel Controls) | பணியாளர்களின் தேர்வு, பயிற்சி மற்றும் அவர்களின் தகுதிகளில் கவனம் செலுத்துதல்.செயல்முறையுடன் இணைந்துள்ள மக்களின் திறன் மற்றும் நேர்மையைப் பொறுத்தே நிறுவன முறைமையின் தரம் அமையும் |

***(06 புள்ளிகள்)***

**(d)**

*i.* வேலைகளை பகிர்ந்தளித்தல்

*ii.* கணினி இயக்க ஊழியர்கள் மட்டும் அணுக கூடிய வகையில் செயல்திட்டத்திற்கு (ப்ரோக்ராம்) கடவுச்சொல் பாதுகாப்பு.

iii. தேவைக்கு மட்டும் கணினியை அணுகக் கூடிய வகையில் கட்டுப்படுத்துதல் (உதாரணம் : கதவுகளைப் பூட்டுவதன் மூலம்)

iv. மென்பொருளில் வைரஸை பரிசோதித்தல். வைரஸ் எதிர்ப்பு மென்பொருளை பயன்படுத்தல் மற்றும் அங்கீகரிக்கப்படாத செயல்திட்டம் (ப்ரோக்ராம்) அல்லது கோப்புகளைப் பயன்படுத்துவதைத் தடைசெய்ய கூடிய கொள்கை.

v. செயல்திட்டங்களின் (ப்ரோக்ராம்) காப்பு பிரதிகள் எடுத்து வேறு இடங்களில் சேமித்தல்.

***(04 புள்ளிகள்)***

aat SRI LANKA

(e)

i. கட்டுப்பாட்டு சூழலில் வினைத்திறனற்ற அம்சங்கள் அல்லது மூலகங்கள் இருப்பதற்கான ஆதாரங்கள்

ii. ஆபத்தை அடையாளம் காணுதல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் மதிப்பிடுவதற்கான இடர் மதிப்பீட்டு செயல்முறை இல்லாமை

iii. அடையாளம் காணப்பட்ட குறிப்பிடத்தக்க இடருக்கு வினைத்திறனற்ற பதிலளிப்புக்கான ஆதாரம்

iv. வெளிப்புற கணக்காய்வாளர்களின் செயன்முறைகள் மூலம் கண்டறியப்பட்ட வரைவு நிதி கூற்றுகளில் உள்ளகுறிப்பிடத்தக்க தவறான அறிக்கையிடல், நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாடுகளால் தடுக்கப்படவோ, அல்லது கண்டறியப்பட்டு சரிசெய்யப்படவில்லை.

v. கட்டுப்பாடுகளின் தோல்விக்கு ஓரளவு காரணமாகக் கூறப்படும் இடர் நிகழ்வுகள்.

*(03 புள்ளிகள்)*

*(மொத்தம் 25 புள்ளிகள்)*

***வினா 09 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :***

(a)

Malcom PLC யின் கணக்காய்வில் விசேட கவனம் தேவைப்படும் பகுதிகள்

i. வியாபார வருமதிகள் உண்மையாகவும் சரியாகவும் இருத்தல்
ii. வருமானத்தை அங்கீகரித்தல் மற்றும் சாத்தியமான மோசடிக்கான இடர்
iii. உறவுமுறைத் தரப்பினருடனான பரிவர்த்தனைகள் மற்றும் வெளிப்படுத்தல் இணக்கம்
iv. வாடிக்கையாளரின் அதிக ஆபத்துள்ள தன்மை காரணமாக ஏற்படக்கூடிய கணக்காய்வு இடர்கள்

மாற்று பதில் - Alternate answer

- கடன்பட்டோர்
- விற்பனை
- தரகு கொடுப்பனவுகள்
- பட்டியலிடக்கூடிய விதிகளுடன் இணங்குதல்
- கடன் ஒப்பந்தங்கள்.

*(05 புள்ளிகள்)*

(b)

நியாயமான உறுதிப்பாட்டு ஈடுபடுத்தலுக்கும் மட்டுப்படுத்தப்பட்டஉறுதிப்பாட்டு ஈடுபடுத்தலுக்கும் இடையிலான வேறுபாடுகள்

| நியாயமான உறுதிப்பாட்டு ஈடுபடுத்தல் | மட்டுப்படுத்தப்பட்ட உறுதிப்பாட்டு ஈடுபடுத்தல் |
|---|---|
| ஒரு நியாயமான முடிவை எடுக்க உறுதிப்பாட்டு சேவை வழங்குநர் போதுமானதும் பொருத்தமானதுமான ஆதாரங்களை சேகரிக்கிறார். | ஒரு மட்டுப்படுத்தப்பட்ட உறுதிப்பாட்டு முடிவை எடுக்க உறுதிப்பாட்டு சேவை வழங்குநர் போதுமானதும் பொருத்தமானதுமான ஆதாரங்களை சேகரிக்கிறார். |
| அனைத்து அம்சங்களிலும் அடையாளம் | அடையாளம் காணப்பட்ட பொருத்தமான |

| | |
|---|---|
| காணப்பட்ட பொருத்தமான அளவுகோல் களுடன் ஒத்துப்போகிறது என்று முடிவு செய்கிறது. | அளவுகோல்கள் சூழ்நிலைகளுக்கு மட்டுமே பொருந்தும் என்று முடிவு செய்கிறது |
| உறுதிப்பாட்டு கருத்தானது நேர்மறைச் சொற்களால் சொல்லப்படுகிறது | உறுதிப்பாட்டு கருத்தானது எதிர்மறைச் சொற்களால் சொல்லப்படுகிறது |
| அதிக அளவிலான உத்தரவாதத்தை அளிக்கிறது | குறைந்த அல்லது மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான உத்தரவாதத்தை அளிக்கிறது |
| போதுமான தகுந்த சான்றுகளைப் பெறுவதற்காக முழுமையான நடைமுறைகள் பின்பற்றப்படுகிறது - கட்டுப்பாடுகளின் சோதனை மற்றும் கணிசமான கணக்காய்வு நடைமுறைகள் | குறைவான நடைமுறைகளே பின்பற்றப்படுகிறது - முக்கியமாக விசாரணைகள் மற்றும் பகுப்பாய்வு நடைமுறைகள். |

***(04 புள்ளிகள்)***

**(c)**

**சரியான திட்டமிடல், நிதி அறிக்கைகளின் கணக்காய்வுக்கு பல வழிகளில் பயனளிக்கிறது, அவற்றில் பின்வருவன அடங்கும்**

- கணக்காய்வின் முக்கியமான விடயங்களுக்கு பொருத்தமான கவனம் செலுத்த கணக்காய்வாளருக்கு உதவுதல்.
- சாத்தியமான சிக்கல்களை சரியான நேரத்தில் கண்டறிந்து தீர்க்க கணக்காய்வாளருக்கு உதவுதல்.
- கணக்காய்வு ஈடுபடுத்தலை முறையாக ஒழுங்கமைத்து நிர்வகிக்க உதவுதல், இதனால் வினைத்திறனாக செயல்படுத்தப்படும்.
- எதிர்பார்க்கப்படும் இடர்களுக்கு பதிலளிக்கும் அறிவு மற்றும் திறன்களைக் கொண்ட ஈடுபடுத்தல் குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதிலும், அவர்களுக்கு பொருத்தமான பணி ஒதுக்கீடு செய்வதிலும் உதவும் .
- ஈடுபடுத்தல் குழு உறுப்பினர்களை வழிநடத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் அத்துடன் அவர்களின் பணியை மதிப்பாய்வு செய்தல் போன்றவற்றை எளிதாக்கும் .
- துணை நிறுவனங்களின் கணக்காய்வாளர்கள் மற்றும் நிபுணர்ளால் செய்யப்படும் பணிகளை ஒருங்கிணைப்பதில் உதவும்.

***(04 புள்ளிகள்)***

**(d)**

**(i)**

மோசடியான நிதி அறிக்கையிடல் என்பது நிதி அறிக்கை பயன்பாட்டாளர்களை ஏமாற்றுவதற்காக நிதி அறிக்கைகளில் தொகைகள் அல்லது வெளிப்படுத்தல்கள் விடுபடுதல் மற்றும் வேண்டுமென்றே தவறான அறிக்கையிடலை உள்ளடக்கியது, இதில் முக்கியமானவையாக பின்வருவன அடங்கும்.

- நிதி அறிக்கைகள் தயாரிக்கப்பட்ட கணக்கியல் பதிவுகள் அல்லது துணை ஆவணங்களை சீராக்குதல் , பொய்மைப்படுத்துதல் அல்லது மாற்றியமைத்தல்.
- நிதி அறிக்கைகளில் பரிவர்த்தனைகளின் தவறான வெளிப்படுத்துதல் மற்றும் வேண்டுமென்றே விடுபடுதல்.
- சர்வதேச கணக்கியல் கோட்பாடு களின் தவறான பிரயோகம் .
- உண்மைக்கு புறம்பான நாளேட்டு பதிவுகளை மேற்கொள்ளல் .

SRI LANKA

- கணக்கியல் மதிப்பீடுகளில் பயன்படுத்தப்படும் எடுகோள்கள் மற்றும் தீர்ப்புகளை பொருத்தமற்ற முறையில் சீராக்கம் செய்தல்.
- நிதி அறிக்கைகளின் தொகைகளை பாதிக்கக்கூடிய காரணங்களை மறைத்தல்.

*(02 புள்ளிகள்)*

**(ii)**

மோசடியைக் கண்டறிவதற்கும் தடுப்பதற்கும் முதன்மையான பொறுப்பு, Malcom PLC இன் நிர்வாகப் பொறுப்பில் உள்ளவர்களிடமும் மற்றும் முகாமைத்துவத்திடமும் உள்ளது. ஒழுக்க நெறிமுறை நடத்தை மற்றும் நேர்மையான கலாச்சாரத்தையும் உருவாக்குவதற்கான உறுதிப்பாட்டுடன் இருக்கும் குழுவினரால் அமுல்படுத்தப்பட்டு நிர்வாகப் பொறுப்பில் உள்ளவர்களால் மேற்பார்வை செய்யப்படுகிறது . மோசடி அபாயத்தை அதிகரிக்கும் நிலைமைகள்.்.நிகழ்வுகளைத் தவிர்க்க முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

*(04 புள்ளிகள்)*

**(e)**

Malcom PLC நிர்வாகத்திற்குத் தெரிவிக்க வேண்டிய முக்கியமான விடயங்கள் முக்கியமாக கீழே உள்ளன:

| **தெரிவிக்க வேண்டிய விடயங்கள்** | **விபரங்கள்** |
|---|---|
| நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புகள் | நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புகளை கணக்காய்வாளர் நிர்வாகத்திற்கு பொறுப்பானவர்களுக்கு தெரிவிக்க வேண்டும், இதில் நிர்வாகத்திற்கு பொறுப்பானவர்களின் மேற்பார்வையுடன், முகாமைத்துவத்தால் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் குறித்த ஒரு அபிப்பிராயத்தை உருவாக்குவதற்கும் வெளிப்படுத்துவதற்கும் கணக்காய்வாளர் பொறுப்பு என்பதும் உள்ளடங்கும் . |
| கணக்காய்வின் திட்டமிடப்பட்ட பரப்பு மற்றும் நேரம் | கணக்காய்வின் திட்டமிடப்பட்ட பரப்பு மற்றும் நேரம் பற்றிய விபரத்தை கணக்காய்வாளர் நிர்வாகத்திற்கு பொறுப்பானவர்களுடன் தெரிவிக்க வேண்டும். |
| கணக்காய்வில் இனம் காணப்பட்ட முக்கியமான விடயங்கள் | • அறிக்கையிடப்பட்ட வட்டி வருமானம் ரூ. 407,500 க்கும் குறைவாக இருப்பதால் தெளிவாக முக்கியமற்றது.<br><br>சீவுயின் தொகை தெளிவாக முக்கியமற்றது ஆனால் தன்மை குறிப்பிடத்தக்கது. நிதி கூற்றுகளில் வெளிப்படுத்தலைச் செய்ய நிர்வாகம் உடன்படவில்லை என்றால் இது அபிப்பிரயத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும்.<br>• மொத்த தவறான அறிக்கையிடல் (ரூ. 14,350,000 + ரூ. 2,050,000) = ரூ. 16,400,000.<br>• தவறான அறிக்கையிடல் தனித்தனியாக குறிப்பிடத்தக்கவை அல்ல, ஆனால் மொத்த தவறான கூற்றுகள் பொருண்மை மட்டத்தை விட அதிகமாக இருக்கலாம்.<br><br>எனவே, நிர்வாகம் அத்தகைய தவறான அறிக்கையிடலை |

| | |
|---|---|
| | சீராக்கம் செய்ய வேண்டும் அல்லது கருத்தில் கொள்ளத் தவறினால், கணக்காய்வாளர் அதன் தாக்கத்தை கருத்தில் கொண்டு கணக்காய்வு அறிக்கையில் முனைப்பழியான அபிப்பிராயம் வெளியிடப்படும். |
| கணக்காய்வாளரின் சுயாதீனம் | பட்டியலிடப்பட்ட நிறுவனங்களாயின் கணக்காய்வாளர் நிர்வாகப் பொறுப்பில் உள்ளவர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டும்:<br>• ஈடுபடுத்தல் குழு மற்றும் நிறுவனத்தில் உள்ள ஏனையோரும் பொருத்தமான வகையில், நிறுவனம், மற்றும் வலையமைப்பில் உள்ள நிறுவனங்களுடனான சுயாதீனம் தொடர்புடைய ஒழுக்க நெறிமுறைக் கோட்பாடுகளுக்கு இணங்கியுள்ளன என்ற அறிக்கை.<br>• நிறுவனம், வலையமைப்பில் உள்ள நிறுவனங்கள் மற்றும் நிறுவனத்திற்கு இடையிலான அனைத்து உறவுகள் மற்றும் பிற விடயங்கள், கணக்காய்வாளரின் தொழில்முறை தீர்ப்பில், சுயாதீனமாகவும் நியாயமாகவும் செயல்படுவதாகக் கருதப்படலாம். இதில் நிறுவனம் மற்றும் வலையமைப்பில் உள்ள நிறுவனங்கள் நிறுவனத்தால் கட்டுப்படுத்தப்படும் நிறுவனம் மற்றும் துணை நிறுவங்களுக்கு வழங்கும் கணக்காய்வு மற்றும் கணக்காய்வு அல்லாத சேவைகளுக்கான நிதி அறிக்கைகளால் உள்ளடக்கப்பட்ட காலகட்டத்தில் வசூலிக்கப்படும் மொத்த கட்டணங்களும் அடங்கும். கணக்காய்வாளரின்சேவைகளின் சுயாதீன தன்மையை மதிப்பிட்டதனால்,நிர்வாகப் பொறுப்பில் உள்ளவர்களுகளால் பொருத்தமான வகைகளுக்கு இந்தக் கட்டணங்கள் ஒதுக்கப்படும்.<br><br>அடையாளம் காணப்பட்ட சுயாதீனத்திற்கான அச்சுறுத்தல்களை நீக்க அல்லது அவற்றை ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவிற்குக் குறைக்கப் பயன்படுத்தப்பட்ட தொடர்புடைய பாதுகாப்பு நடவடிக்கைகள். |

*(06 புள்ளிகள்)*

*(மொத்தம் 25 புள்ளிகள்)*

*பகுதி C முடிவு*

***Notice:***

These answers complied and issued by the Education and Training Division of AAT Sri Lanka constitute part and parcel of study material for AAT students.

These should be understood as Suggested Answers to question set at AAT Examinations and should not be construed as the “Only” answers, or, for that matter even as “Model Answers”. The fundamental objective of this publication is to add completeness to its series of study texts, designs especially for the benefit of those students who are engaged in self-studies. These are intended to assist them with the exploration of the relevant subject matter and further enhance their understanding as well as stay relevant in the art of answering questions at examination level.

*© 2021 by the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka). All rights reserved. No part of this document may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission of the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*